## DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, KODAVASAL

| | | |
|---|---|---|
| Case No. | : | **C.C. No. 309/2025** |
| Prosecution witness | : | P.W. 2 |
| List of witness | : | A.W.1 |
| Name | : | சூர்யமூர்த்தி |
| Father's /Husband Name | : | கலியபெருமாள் |
| Village | : | குடவாசல் |
| Taluk | : | குடவாசல் காவல் நிலையம் |
| Age | : | 27 |
| Occupation | : | உதவி ஆய்வாளர் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873, 12th day of May 2026. Accused present.

**முதல் விசாரணை**

நான் தற்போது குடவாசல் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். மேற்படி காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்த சூர்யா என்பவர் பணிமாறுதல் காரணமாக சாட்சியமளிக்க இயலாத நிலையில் உள்ளதாலும் மேற்படி உதவி ஆய்வாளரின் கையெழுத்து மற்றும் கையொப்பம் நன்கு தெரியும். குற்ற எண்.1000/2021 வழக்கு கோப்பை பார்வையிட்டு இவ்வழக்கில் நான் சாட்சியம் அளிக்கிறேன்.

கடந்த 16.10.2021 ந் தேதி 10.30 மணிக்கு மதுவிலக்கு குற்றம் சம்பந்தமாக குடவாசல் காவல் சரகம் மஞ்சகுடி எதிரியின் வீட்டின் பின்புறம் ஜெயசீலன் மற்றும் கணபதி ஆகியோர்களுடன் மதுவிலக்கு சம்பந்தமாக உதவி ஆய்வாளர் கண்காணித்து வந்த போது சந்தேகப்டும்படியாக நின்று கொண்டிருந்த பின்னால் பெயர் விலாசம் கேட்டுத் தெரிந்த சண்முகசுந்தரம், த/பெ. கல்யாணசுந்தரம் போலீசாரகிய எங்களை கண்டதும் தப்பிக்க முயன்றவரை பிடித்து அவர் நின்ற இடத்தை சோதனை செய்த போது சுமார் 15 லிட்டர் பிடிக்ககூடிய 11 பாலிதீன் பைகளில் தலா 10 லிட்டர் வீதம் மொத்தம் 110 லிட்டர் பாண்டி சாராயம் இருப்பது தெரிய வந்தது. அதை அவர் வைத்திருப்பதற்கு அனுமதியும், உரிமமும் இல்லாததாலும், தனிநபர் சாட்சிகள் யாரும் இல்லாததாலும், போலீஸ் சாட்சிகள் முன்னிலையில் எதிரி சண்முகசுந்தரம் என்பவரை 10.30 மணிக்கு காரணம் கூறி கைது செய்து எதிரி வசமிருந்த பாண்டி சாராயத்தை கைப்பற்றி அவர்கள் முன்னிலையில் மாலை 10.45 கைப்பற்றுதல் மகசர் தயார் செய்துள்ளார். மேற்கண்ட

சாட்சியகளிடம் கைப்பற்றுதல் மகசரில் கையொப்பம் பெற்றுள்ளார். பின்பு கைப்பற்றிய மதுபானபாட்டில்களை காவல் உதவி ஆய்வாளர், ஜெயசீலன் மற்றும் சக்தி கணபதி ஆகியோர் முன்னிலையில் மாலை 11.15 மணிக்கு சம்பவ இடத்திலேயே கொட்டி அழிப்பு மகசர் செய்துள்ளார். பின்பு எதிரியுடன் காவல் நிலையம் வந்து எதிரியின் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார். **அந்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்பு எதிரியை தக்க வழி காவலுடன் நீதிமன்றத்தில் ஆஜர் செய்துள்ளார். பின்பு தன்னுடன் வழக்கில் உதவியாக இருந்த சிவானந்தம் மற்றும் குருசீலன் ஆகியோர்களை தனிதனியாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். சாட்சிகளை முறையாக விசாரணை செய்துள்ளார். சாட்சிகளை முறையாக விசாரணை செய்தும் சம்பவம் உண்மை என தெரிய வந்ததால் கடந்த 16.10.2021 ம் தேதி எதிரி சண்முகசுந்தரம் என்பவர் மீது பிரிவு 4(1)(aaa) TNP Amendment Act இறுதி அறிக்கை தயார் செய்துள்ளார்.

<u>**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**</u> :

நான் சொன்ன நேரத்தில், சொன்ன தேதியில் காவல் ரோந்து பணிக்கு செல்லவில்லை என்றாலும், எதிரியிடமிருந்து எவ்வித மதுபான பாட்டில்களை, எதிரியை சொன்ன தேதியில், சொன்ன இடத்தில் வைத்து கைது செய்யவில்லை என்றாலும் சரியல்ல. கைப்பற்றுதல் மகசர் மற்றும் அழித்தல் மகசர் பின்னிட்டு காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. இவ்வழக்கின் TNP Amendment Act பிரிவு 32 ஐ சரிவர பின்பற்றாமல் வழக்கு போடப்பட்டது என்றாலும் புள்ளி விவரத்திற்காக போடப்பட்டது என்றாலும், அதற்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. எதிரிக்கும், இவ்வழக்கிற்கும் சம்பந்தமில்லை என்றால் சரியல்ல.

<u>**மறு விசாரணை**</u> :- இல்லை.

Taken down by the typist under my dictation in open Court read over to the witness admitted and acknowledged by him to be Correct.

MOHAMED ARSHAD FAREED M

Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
Date: 2026.05.12 13:38:15 +0530

District Munsif -Cum-
Judicial Magistrate,
Kodavasal.